**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 159/2022**

Prosecution witness : 1

| | |
|---|---|
| Name: ஜெய்கணேஷ் | Caste: |
| Father'sName: | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |

A1 and A2 present

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 10.09.2025

**முதல் விசாரணை**:

நான் தற்போது பி-3 தெப்பக்குளம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் உள்ளேன். கடந்த 10.06.2019 அன்று காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.ஆறுமுகம் என்பவருடன் நானும் எனது காவல்நிலைய முதல்நிலை காவலர்-சரவணன்-2415 என்பவரும் ரகசிய தகவலாளி நேரில் வந்து ஆஜராகி சொன்ன ரகசிய தகவலின் அடிப்படையில் தகுந்த உபகரணங்களை எடுத்துக்கொண்டு பி-3 தெப்பக்குளம் காவல்நிலையத்திற்கு உட்பட்ட தெப்பக்குளம் மேற்கு திசையை நோக்கி சென்று கொண்டிருந்தோம். அப்போது TN 67 A 4255 RXJ யமகா என்ற எண்கொண்ட சந்தேகத்திற்கு இடமான இரண்டு நபர்கள் வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் முன்னுக்குப்பின் கூறி இறுதியாக 1.தினேஷ்குமார், வயது 19, த/பெ.சந்திரசேகர்,செல்லூர் 3வது தெருவை சேர்ந்தவர் என்றும் 2, பாலமுருகன், வயது 22, த/பெ.நவநீதகிருஷ்ணன், மதுரை அனுப்பானடி நடுத்தெருவை சேர்ந்தவர் என்று கூறினார்கள். எதிரிகள் வந்த இருசக்கரவாகனத்தை சோதனை செய்தபோது பெரிய பிளாஸ்டிக் பொட்டலம் இருந்தது. சார்பு ஆய்வாளர் தங்களையும் தங்கள் இருசக்கரவாகனத்தையும் சோதனை செய்யவேண்டியுள்ளதால் நீதித்துறை நடுவர் முன்னிலையிலோ அல்லது அரசால் அங்கிகரிக்கப்பட்ட அரசு அலுவர் முன்போ தங்களை சோதனை செய்ய முழுஉரிமை

உள்ளது என்று கூறினார். எதிரிகள் இருவரும் காவல்துறை அதிகாரியாகிய தாங்களே சோதனை செய்யலாம் என்று ஒப்புதல் கூறினார்கள். பின்னர் 50(1)**NDPS ACT** சோதனை சம்மத கடிதத்தை உதவி ஆய்வாளர் அவர்கள் 21.30 மணிக்கு தயார் செய்து சார்பு செய்தார். பின்பு உதவி ஆய்வாளர் அவர்கள் காவலர்கள் இருவர் முன்னிலையில் இருசக்கரவாகனத்தை சோதனை செய்தபோது பெரிய பிளாஸ்டிக் பொட்டலம் இருந்தது. அதனை விசாரித்தபோது அரசால் தடை செய்யப்பட்ட அரசு அனுமதி இல்லை என்று கூறினார். மேலும கஞ்சா பொட்டலத்தை தனது சுயலாபத்திற்கும், பணம் சம்பாதிக்கும் எண்ணத்துடன் பெயர், விலாசம், முகவரி தெரியாத நபரிடம் வாங்கி வந்து தனது நண்பருடன் சேர்ந்து அதை பிரித்து பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு விற்றும், கூலிவேலை செய்யும் நபர்களிடம் கொடுக்க கொண்டுசெல்வதாக ஒப்புதல் வாக்குமூலம் கூறினார். சார்பு ஆய்வாளர் அவர்கள் 22.00 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். மேலும் அரசால் தடைசெய்யப்பட்ட கஞ்சா என்ற போதைப்பொருள் வைத்திருப்பது குற்றம் என்று கூறி தகுந்த உபகரணங்கள் கொண்டுசென்ற முள்தராசை எடுத்து எடைபோட்டபோது 2.100கிராம் இருந்தது. அதனை 50கிராம் பகுப்பாய்வுக்காகவும், 50கிராம் சோதனைக்காகவும் பிரித்து அதற்கு **S**1, **S**2 என பெயரிட்டு காவல்துறை சீல் வைக்கப்பட்டது. மீதம் உள்ள கஞ்சாவை காப்பிகலர் பொட்டலம் போட்டு அதனை **P**1 என குறியீடு செய்து போலீஸ் சீல் வைக்கப்பட்டது. மேலும் அரசால் தடைசெய்யப்பட்ட கஞ்சா வைத்திருப்பது சட்டப்படி குற்றம் என்று கூறி யாரும் சாட்சியாக முன் வராத காரணத்தால் (சாட்சி கையில் வைத்திருந்த வழக்கு கோப்பை பார்த்து சாட்சியம் அளிப்பதாக எதிரி தரப்பு வழக்கறிஞர் கூறினார்). பின்பு 22.00,23.00 மணிக்கு எதிரிகளையும் இருசக்கரவாகனத்தையும் காவல்நிலையம் அழைத்து வந்து பி-3 காவல்நிலைய குற்ற எண்.263/2019 என பதிவு செய்தார். மேலும் ஒப்புதல் வாக்குமூலம், சோதனை சம்மத கடிதம் மற்றும் அத்தாட்சியில் எங்கள் இருவரிடமும் கையெழுத்து வாங்கினார். இதனை நிலைய ஆய்வாளர் அவர்கள் முன்னிலையில் விசாரித்தார். சோதனை சம்மத கடிதம் **அ.சா.ஆ.**1 ஆகும். அத்தாட்சி **அ.சா.ஆ.**2 ஆகும்.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.